தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – ஐப்பசி 22

2010 நவம்பர் 8, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்."

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 18–5–2010 அன்றும், திரு. என். லட்சுமிநாராயணன் அவர்கள் 19–5–2010 அன்றும், திரு. மு. இரத்தினசபாபதி அவர்கள் 2–6–2010 அன்றும், திரு. அ. செங்குட்டுவன் அவர்கள் 2-6-2010 அன்றும், திரு. ரெ. செல்வம் அவர்கள் 15–6–2010 அன்றும், திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் அவர்கள் 9–8–2010 அன்றும், திரு. ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் 8–9–2010 அன்றும், திரு. மூ. மாரிமுத்து அவர்கள் 25–9–2010 அன்றும் மற்றும் திரு. அ. வெங்கடாசலம் அவர்கள் 7–10–2010 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 ஆம் ஆண்டு

[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 8

வரையிலும், 1985 முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலும் மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1972 முதல் 1978 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராகவும், 1978 முதல் 1980 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1978 முதல் 1987 ஆம் ஆண்டு வரையிலும், 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலும் தமிழக அமைச்சராகவும் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. என். லட்சுமிநாராயணன் அவர்கள் மதுரை மாவட்டம், மதுரை மத்தி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 ஆம் ஆண்டு வரை திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. மு. இரத்தினசபாபதி அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. செங்குட்டுவன் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 ஆம் ஆண்டு வரை சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. ரெ. செல்வம் அவர்கள் கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 ஆம் ஆண்டு வரையில் சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 ஆம் ஆண்டு வரையில் திறம்படப் பணியாற்றினார்கள்.

2010 நவம்பர் 8] [பேரவைத் தலைவர்]

திரு. மூ. மாரிமுத்து அவர்கள் சேலம் மாவட்டம், தலைவாசல் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. வெங்கடாசலம் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும், 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலும் நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும் 19–5–2001 முதல் 26–6–2001 வரை தமிழக அமைச்சராகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 9–35

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். திரு. டி. சுதர்சனம், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் மறைவு குறித்த தீர்மானம்.

“திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதியிலிருந்து 2006 ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இப்பேரவையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் திறம்படப் பணியாற்றியவரும், கட்சி அரசியலுக்கு